ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2265/28 - 2022 පෙබරවාරි මස 01 වැනි අඟහරුවාදා - 2022.02.01

*2265/28 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு புபுரெஸ்ஸ அடபாகே நீர் வழங்கல் திட்டத்தின், தும்பேலவக நீர் விநியோகத்தாங்கியை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/ *02/01/*KY/ *399*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35,* "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2022, சனவரி 31.*

1A – G 35975 – 21 (2022/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1140 தும்பேலவக, கிராம அலுவலர் பிரிவில், எரின்வத்த கிராமத்திலமைந்த, "எரின்வத்த" எனும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 10 பர்ச்சஸ் அளவிலான காணித்துண்டு.*

*காணியின் எல்லைகள் :*

*வடக்கு : பீ. ஜீ. விஜேவர்தன உரிமை கோரும் காணி;*
*கிழக்கு : பீ. ஜீ. விஜேவர்தன உரிமை கோரும் காணி;*
*தெற்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி;*
*மேற்கு : வீதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* *திரு. டீ. ஜீ. ஜயந்த கீர்த்திசிங்க,*
*பிரதேச சபை உறுப்பினர்,*
*இலக்கம் 38, மொரஹேன,*
*பன்விலதென்ன.*

EOG *01 - 0316*